211—

ஆவடியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

*10437—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

216—

செட்டிக்குளம் கால்நடை மருத்துவமனை.

*13794—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதியில் செட்டிக்குளத்தில் கால்நடை மருத்துவமனையை மீண்டும் இயங்க வைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செட்டிக்குளம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஏதும் இல்லை. கேந்திர கிராம விரிவாக்க நிலையம் செயல்பட்டது. துறையின் புனரமைப்புக்குப் பின்னர் இந்நிலையம் மூடப்பட்டு பார்வை நிலையம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வரும் ஆண்டுகளில் சாத்தியக் கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில் ராதாபுரம் தொகுதி, செட்டிகுளம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து ஆராயலாம்.